# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 46 — 1973 පෙබරවාරි 09 වැනි සිකුරාදා — 1973.02.09

46 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 25 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. | |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. | 26 | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. | — |


*கவனிக்க.—நீதிமன்றங்களின் மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும் சனிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்

### "அ" அல்லது "ஆ" பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் "அ" பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் "ஆ" பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் திகதி.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,075. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் டிசெம்பர் மாதம் 23 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : திருமதி சேரேஃப்கோவ் கிறேஸ் போன் ஜர்மன் கிறேப்ஸ் என்ற பெயரால் அறியப் படுபவர் ; இல. 1, ரு டி லா பயிக்ஸ், பரிஸ் (ஸேன்) பிரான்ஸ் ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 48. (6) வியாபாரச்சரக்கு : வாசனையூட்டிய சவர்க்காரங்கள், வாசனைத்திரவங்கள் உற்பத்தியாக்கத்திற்கு அத்தியாவசிய தைலங்கள், சோடனைப் பொருட்கள், கூந்தல் தைலங்கள், பற் சுத்திகரிப்பு ஆக்கங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**C A B O C H A R D**

ஆர். எல். த. சில்வா
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு.
1972 ம் ௵ ஓகஸ்டு ௴ 16 ந் ௳.

2–316/1—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 31,731. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜூலை மாதம் 24 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : த வெல்கம் ஃபவுன்டேஷன் லிமிட்டட் ஓர் பிரித்தானியக் கம்பெனி, இல. 183/193, யுஸ்டன் வீதி, லண்டன், என். டப்ளியு 1, இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்தது. (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அண்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 8 (6) வியாபாரச் சரக்கு ஔடத, மருந்துப் பாகசாலையாக்கத் தயாரிப்புக்களும், பதார்த்தங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவும் :

**I N S T A P A R**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ௵ ஜூலை ௴ 19 ம் ௳.

2–316/2—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

(1) வியாபாரச்சின்னம் இல.: 30,768. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 17 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : நொல் ஏ. ஜீ. ஜெர்மனியச் சட்டங்களினடிப்படையில் முறையாகப் பதிவுசெய்யப்பட்டதோர் கம்பெனி) இல. 67, லுட்விக்ஷாஃபென் ஆம் ரீன் 2, போஸ்ஃபச், ஜெர்மனி, உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் அபேரத்ன அன்டு அபேரத்ன, நீகிரிஸ் கட்டடம், யோக் வீதி, கொழும்பு 1. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : இவ்வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ ஓகஸ்டு ௴ 7 ம் ௳.

2–447—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

## வியாபார உரிமை அடையாள அறிவிப்பு

### பிழை திருத்தம்

1971 ஆம் வருடம் மே மாதம் 14 ஆம் திகதியிட்ட, 14,958 ஆம் இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள, 8 ஆம் வகுப்பைச் சேர்ந்த , 1968 ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதியையும், 30,958 ஆம் இலக்கத்தையுமுடைய வியாபார உரிமை அடையாளம் சார்பான விளம்பரத்திலுள்ள 7 வது விடயத்தில் தவிர்க்கப்பட்டுள்ள வியாபார உரிமை அடையாளத்தின் பிரதி உருவம், பின்வருமாறு சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும் :—

GRUNDIG

ஆர். எல். த சில்வா,
வியாபார உரிமை அடையாளப் பதிவாளர்.

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
எச்சிலொன் சதுக்கம்,
கொழும்பு 1,
1972 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி.

2–215—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| பெப்புருவரி | 2.2.73 | வெள்ளி | 26.1.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி | 2.2.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் | 9.2.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி | 15.2.73 | வியாழன் | ந.ப. 12.00 |
| மாச்சு | 2.3.73 | வெள்ளி | 23.2.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 2.3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 9.3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 16.3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 23.3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஏப்பிறல் | 6.4.73 | வெள்ளி | 30.3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 6.4.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 19.4.73 | வியாழன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒக்தோ மீ 18 ந் தி.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது.